ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2145/5 - 2019 ඔක්තෝම්බර් මස 14 වැනි සඳුදා - 2019.10.14

*2145/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ 5/2007*

**2006 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம்**

*2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 2(இஅ) மற்றும் 8(2) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் எண்ணிம உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

அஜித் பி. பெரேரா,  
எண்ணிம உட்கட்டமைப்பு மற்றும்  
தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர்.

கொழும்பு,  
2019, ஒற்றோபர் 10.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் (இலங்கை அடையாளங்காண் இலக்கம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2019ஆம் ஆண்டு ஒற்றோபர் 10 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. பதிவாளர் தலைமையதிபதியினால் ஒவ்வொரு பிறப்பும் பதிவு செய்யப்பட்டதன்மீது இதற்கான அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் இலங்கைப் பிரசை ஒவ்வொருவர் தொடர்பிலும் (இதனகத்துப்பின்னர் 'SLIN' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை அடையாளங்காண் இலக்கம் ஒன்றை ஆணையாளர் தலைமையதிபதியானவர் உருவாக்குதல் வேண்டும்.

1A - G 31256 - 22 (2019/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* பதிவாளர் தலைமையதிபதிக்கு மற்றும் இலங்கைப் பிரசைகளுக்கான பிரசையை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்குமாக 'SLIN' வழங்குவதன் மூலம் தனித்துவமான அடையாளங்காண் இலக்கத்தைப் பயன்படுத்த ஆணையாளர் தலைமையதிபதி அதிகாரமளித்து வசதியளித்தல் வேண்டும்.

*4.* பிரசைகளை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல் அனைத்திற்குமாக ஆணையாளர் தலைமையதிபதியினால் உருவாக்கப்பட்ட 'SLIN' பயன்படுத்துதல் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தின், மாகாணசபையின், மாகாண அமைச்சின் அல்லது திணைக்களத்தின் கடமையாதல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில் -

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதி எனப்பொருள்படும்.

"அரசாங்க நிறுவனம்" ஆனது ஒரு அமைச்சு, ஒரு அரசாங்க திணைக்களம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம், ஒரு உள்ளூர் அதிகாரசபை, அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது வேறு பொறுப்பு முயற்சி யாவற்றையும் அத்துடன் எந்தக் கம்பனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை பங்குகளின் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டதை கொண்டுள்ளதோ, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட அந்தக் கம்பனியையும் உள்ளடக்குகின்றது.

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகரசபை, பட்டினச்சபை அல்லது கிராமசபை மற்றும் ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களிற்கு, கடமைகளிற்கு மற்றும் பணிகளிற்கு நேரொத்ததான அல்லது அதற்கு சமமான தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையும் உள்ளடக்கப்படுகின்றது.

"பகிரங்க கூட்டுத்தாபனம்" என்பது, மானியம், கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட முழுஅளவிலான அல்லது பகுதியளவிலான நிதிகள் அல்லது மூலதனத்துடன் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்படுகின்றதான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும்.

"பதிவாளர் தலைமையதிபதி" என்பது, (110ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

## அட்டவணை
## (ஒழுங்குவிதி 2)

| பிறந்த ஆண்டு | ஆண்டின் பிறந்த நாள் | வழங்கப்பட்ட நாளின் தொடர் இலக்கம் | சரிபார்த்தல் எண்ணிமம் | அடையாள அட்டடை பதிப்பு |
|---|---|---|---|---|
| ஆண்டு | திகதி | இலக்கம் | C | A |

**உதாரணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பழைய இலக்கம் | 64 | 104 | 275 | 7 | V |
| புதிய இலக்கம் | 1964 | 104 | 0275 | 7 | |

*11 - 16*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.